(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 70.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 ஏப்ரல் 21, புதன்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

70/2020

கௌரவ ஹேசா விதானகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு சொந்தமான தொழில்நுட்ப முன்னேற்றம் குறைந்த தொழிநுட்ப உபகரணங்கள் வாயிலாக சரியான காலநிலை எதிர்வுகூறல்களை பெற்றுக்கொள்ளுதல் பிரச்சினையாக உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்தில் மனிதவள பற்றாக்குறை உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த உபகரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உபகரணங்களுக்கு செலவாகும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) அவற்றை கொள்வனவு செய்யும் நடைமுறை யாதென்பதையும்;

(vi) நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

201/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. திலங்க சுமதிபால அவர்கள் இலங்கை கிரிக்கெட் நிறுவகத்தின் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திகதி;

(ii) இவர் மேற்படி பதவியிலிருந்து விலகிய திகதி;

(iii) இவர் இலங்கை கிரிக்கெட் நிறுவகத்தின் தலைவர் பதவியை வகித்த காலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குரியதாக பாராளுமன்ற அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட ஊழல் மற்றும் மோசடி பற்றிய சம்பவங்கள்;

(iv) மேற்படி ஊழல் மற்றும் மோசடி பற்றிய சம்பவங்கள் தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

என்பன யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

270/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இராணுவம் மற்றும் கடற்படை என்பவற்றுக்கு தேயிலை விநியோகித்த கம்பெனியின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி கம்பெனியினால் விநியோகிக்கப்பட்ட ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை எவ்வளவென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டில் இராணுவம் மற்றும் கடற்படைக்கு தேயிலை விநியோகிப்பதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஏனைய நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட கூறுவிலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட வழங்குனரால் விநியோகிக்கப்பட்ட தேயிலையின் தரம் தொடர்பில் தொடராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வளவு காலத்திற்கொரு தடவை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இராணுவம் மற்றும் கடற்படைக்கு விநியோகிக்கப்பட்ட தேயிலையின் தரம் தொடர்பில் உத்தரவாதமளிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

540/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அறநெறி பாடசாலைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

586/2020

கௌரவ வேலு குமார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் தோட்ட வைத்தியசாலைகள் பெருந்தோட்டத்துறையை சார்ந்ததாக இயங்கி வருகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைந்துள்ள தோட்ட வைத்தியசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி தோட்ட வைத்தியசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி தோட்ட வைத்தியசாலைகள் அமைந்துள்ள தோட்டங்களின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு தோட்ட வைத்தியசாலையிலும் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதிமார் மற்றும் கவனிப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த காலப்பகுதியில் தோட்ட வைத்தியசாலைகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி தோட்ட வைத்தியசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்களின் பெயர்கள் யாவை;

(iv) இதுவரையில் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படாத தோட்ட வைத்தியசாலைகளை எதிர்காலத்தில் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

748/ 2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹஇலுப்பல்லமவில் அமைந்துள்ள களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட உத்தியோகபூர்வ இல்லங்களில் பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) பயன்படுத்த முடியாத உத்தியோகபூர்வ இல்லங்களை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்களை புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

754/ 2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

766/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்பதெனிய ஆதார வைத்தியசாலையானது குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது என்பதையும்;

(ii) அண்மித்த பிரதேசங்களில் வசிக்கும் பெருமளவிலான நோயாளர்கள் சிகிச்சைக்காக மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தருகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையின் பொருட்டு பிரதான நிர்வாகக் கட்டிடமொன்றிற்கான தேவைப்பாடு காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

797/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை பிரதேசமானது ஹொக்கீ விளையாட்டில் தோற்கடிக்க முடியாத ஓர் இடத்தை கைப்பற்றியிருந்தது என்பதையும்;

(ii) மாத்தளை நகருக்கு ஹொக்கீ விளையாட்டின் மூலம் கிடைத்திருந்த அபிமானம் தற்போது ஓரளவு வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மாத்தளை பிரதேசத்தில் ஹொக்கீ விளையாட்டினை மீளக் கட்டியெழுப்பி முன்பிருந்த அபிமானத்தை மீண்டும் பெற்றுத்தருவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

10.

942/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருதானையில் அமைந்துள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் தற்போது நடத்தப்படும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி கல்லூரியில் சிங்கள மொழிமூலம் கற்பிக்கப்படும் சகல பாடநெறிகளும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படுகின்றனவா;

(iii) இன்றேல், ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கல்லூரியில் கடமையாற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி கல்லூரியில் காணப்படும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 23 ஆம் திகதிய 2216/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 சனவரி 12 ஆம் திகதிய 2210/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22(1) ஆம் பிரிவின் கீழ் போத்தலில் அடைக்கப்பட்ட மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 07 ஆந் திகதிய 2209/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 07 ஆந் திகதிய 2209/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3),— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 4 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 07 ஆந் திகதிய 2209/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 05/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 4),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 11 ஆந் திகதிய 2210/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 06/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.